வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 24.01.2026 சனிக்கிழமை இதழ் : 24 பக்கங்கள் : 08

# அதிகார பகிர்வுமுறை தமிழருக்கு அவசியம்!

## வலியுறுத்துகின்றார் ராஜித



கொழும்பு, ஜன. 24

“மகிந்த ஆட்சியின்போது அரச மைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க போராடியவன் நான். எனவே, அதிகாரப்பகிர்வென்பது அவசியம். தமது பகுதியை தாமே ஆளக்கூடிய உரிமை தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும்.”

-இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“போர் முடிவடைந்த கையோடு தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தேன்.

07

## மாங்குளம் பஸ் நிலையத்தை முழுமையான பயன்பாட்டுக்கு கொண்டு வர ஏற்பாடு செய்க!

### அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜன. 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய மையப் புள்ளியாகத் திகழும் மாங்குளம் பேருந்து நிலையத்தை, முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

மாங்குளம் பேருந்து நிலைய அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால், தயாரிக்கப்பட்ட திட்டவரைவு பற்றி ஆராயும் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று

07



## அநுரவை சந்தித்தார் சிறிவர்தன!



கொழும்பு, ஜன. 24

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் மகிந்த சிறிவர்தன, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவைச் சந்தித்து நாட்டின் பொருளாதார நிலவரங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார சவால்கள், எதிர்கால வாய்ப்புகள் மற்றும் பொருளாதாரத்தை

07

## அரசாங்க மருத்துவர்கள் போராட்டம்! நோயாளர்கள் பெரும் அசௌகரியம்!!

கொழும்பு, ஜன. 24

கொடுப்பனவுகள் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நாட்டிலுள்ள பல பிரதான வைத்தியசாலைகளில் நேற்றைய தினம் அவசர மருத்துவ சேவைகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன. வெளிநோயாளர் பிரிவு உள்ளிட்ட எந்த சேவைகளும் இடம்பெறவில்லை. இதனால் பெருமளவான மக்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்று அசௌகரியங்களை எதிர்கொண்டனர். எவ்வாறிருப்பினும் சிறுவர்

07

## எம்.பிக்கள் ஓய்வூதியத்தை இரத்து செய்யவேண்டாம்!

### ஜனாதிபதியிடம் கரு ஜயசூரிய வேண்டுகோள்

கொழும்பு, ஜன. 24

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வது தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தின் காப்பாளர் என்ற ரீதியில் எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில், ஓய்வூதியம் என்பது ஒரு சலுகை மட்டுமல்ல, அது சாதாரண மக்கள் அரசியலுக்கு

07

## தீர்வு கிடைக்காவிடின் போராட்டம் தொடரும்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜன. 24

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், நாடு தழுவிய ரீதியில் இன்று முன்னெடுக்கும் போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கவில்லையாயின், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என எச்சரிக்கை வித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று காலை 8 மணி முதல் நாடு தழுவிய

07

## வலிதென்மேற்கு பிரதேச சபையில் பிரஜாசக்திக்கு எதிராக பிரேரணை

யாழ்ப்பாணம், ஜன. 24

தற்போதைய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட உள்ள பிரஜாசக்திக்கு எதிரான பிரேரணை நேற்று வலிதென்மேற்கு பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது.

குறித்த பிரேரணையை இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ரமணன் சபையில் முன்வைத்து கருத்துரைக்கையில்-

இந்தப் பிரஜாசக்தி என்பது சட்டத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமானதாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் அபிவிருத்திகளை செய்து

07

## அனுஷ பெல்பிட்ட கைது!

கொழும்பு, ஜன. 24

முன்னாள் அமைச்சின் செயலாளரும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான

07

## எதிரணியால் அரசை அசைக்கவேமுடியாது!

### அமைச்சர் சமந்த வித்யாரத்ன

கொழும்பு, ஜன. 24

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிறப்பாக செயல்பட்டுவருகின்றது. தற்போதைய எதிர்க்கட்சியால் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை

07

## வவுனியா பல்கலைக்கழகத்தில் வியாபார ஒத்துழைப்பு மையம்!

வவுனியா, ஜன. 24

வவுனியா பல்கலைக்கழகத்தை மையமாக வைத்து வியாபாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நிறுவனம் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொழில் முனைவோருக்கு ஒத்துழைப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டு வியாபாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற நிறுவனங்களை பல்கலைக்கழகங்களை மையமாக வைத்து ஆரம்பிக்கும் நோக்கோடு வவுனியா பல்கலைக்கழகத்தில் குறித்த ஆய்வு நிறுவனம் ஆரம்பித்து

07

## வடமராட்சி கிழக்கில் டிராக்டர் மூலம் கரைவலை தொழிலில் ஈடுபடத் தடை!

யாழ்ப்பாணம், ஜன. 24

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் உழவு இயந்திரங்களை பயன்படுத்தி கரைவலை தொழில் ஈடுபடுவதை நிறுத்துமாறு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழில் ஈடுபடுவதால் சிறு மீனவர்கள் பாதிக்கப்படுவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் உழவு இயந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழிலில் ஈடுபடுவது தடை செய்யப்படுவதாகவும், கடந்த காலத்தில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனரமைக்கப்படாத வீதியால் பறிபோயுள்ள நான்கு உயிர்கள்

### வலி.தென்மேற்கு பிரதேச சபையில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 24
உயரப்புலம் வீதி புனரமைக் கப்படாத காரணத்தால் நான்கு உயிர்கள் பறிபோனதாக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் நேற்றைய அமர்வில் சுட்டிக் காட்டப்பட்டது.

இது குறித்து உறுப்பினர் களான ச.அச்சுதபாயன் மற்றும் எட்வெட் மரியவாசினி ஆகி யோர் கருத்து தெரிவிக்கையில்-

உயரப்புலம் வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. அந்த வீதியால் நோயாளர் காவு வண்டிகள் கூட செல்ல முடி யாத நிலை காணப்படுகிறது.

குறித்த வீதியால் நோயாளர் காவு வண்டி வரமுடியாததால் இதுவரை நான்கு உயிர்கள் பலியாகி உள்ளன. இன்னமும் எத்தனை உயிர்கள் பறிபோன பின்னர் அந்த வீதியை புனர மைப்பீர்கள்? எனவே விரை வாக அந்த வீதியை புனரமை யுங்கள்-என்றனர்.

இது குறித்து தவிசாளர் ஜெசீதன் கருத்து தெரிவிக்கை யில்-

வீதிகள் புனரமைப்புக்கு வரையறுக்கப்பட்ட நிதியை எமக்கு கிடைக்கிறது. இயன்ற அளவு நாங்கள் வீதி அபிவிருத் திகளை செய்கின்றோம். பிரச் னைகளுக்குரிய வீதிகள் தொட ர்பான விவரங்களை வழங்குங் கள். விசேட நிதிகள் ஏதாவது கிடைக்கும் பட்சத்தில் அவ ற்றை நாங்கள் புனரமைப்போம் -என்றார். (அ-05)

## தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் முன்னாள் அதிபரின் நினைவு தினம்



யாழ்ப்பாணம், ஜன. 24
தெல்லிப்பளை யூனியன் கல் லூரியின் முன்னாள் புகழ்பூத்த அதிபர் அமரர் ஐ.பி. துரைரட் ணத்தின் நினைவுதினம் நேற்று வெள்ளிக்கிழமை காலை கல்லூ ரி முதல்வர் தி.வரதன் தலை மையில் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் விருந்தினர்க ளாக அமரர் ஐ.பி.துரைரட்ண த்தின் பேரன் அயன் பிரசாத் துரைரட்ணம், மற்றும் யாழ்ப் பாணக் கல்லூரி அதிபர் திருமதி, றுசிரா குலசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர்.

நினைவுப் பேருரையினை தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வுகள் அபிவிருத்தித் துறை யின் பணிப்பாளர் கலாநிதி. எஸ்.கே.பிரபாகரன். கலந்து கொண்டு நிகழ்த்தினார்.நிகழ் வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கால்கோள் விழாவும் தைப்பொங்கலும்

யாழ்ப்பாணம், ஜன. 24
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில், கால்கோள் விழா வும், பொங்கல் விழாவும் நேற்று நடைபெற்றது. கால்கோள் விழாவின்போது தரம் 06இல் புதிதாக இணையும் மாணவர் களை வரவேற்கும் முகமாக கால்கோள் விழா முன்னெடுக் கப்பட்டது.

இதன்போது ஆரம்பத்தில் கல்லூரியின் அதிபர் மாணவர் களுக்கு மலர்ச் செண்டு களை வழங்கினார். பின்னர் பிரதி அதிபர், ஆசிரி யர்கள் மற்றும் தரம் 7 இல் கல்வி கற்கும் மாண வர்கள், புதிதாக வருகை தந்த தரம் 06 மாணவர்களுக்கு மல ர்ச் செண்டுகளை வழங் கினர்.

அதனைத் தொடர் ந்து கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்திற்கு முன் னால் பொங்கல், பூசை வழிபா டுகள் இடம்பெற்றன. பொங்கல் விழா இந்து மாமன்றத் தலை வர் யோ.கேதீசனின் வழிகாட்ட லின் கீழ் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் சி. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் கல்லூரியின் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சார் ஊழியர்கள் கலந்துகொண்டனர். (அ-05)



# யாழ்ப்பாணத்தை வர்த்தக உந்துசக்தியாக முன்னிறுத்துவதே எமது கூட்டு இலக்காகும்!

### வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன்



யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாணத்தை இலங்கை யின் பொருளாதாரத்தில் வெறு மனே ஒரு பங்காளராக மட்டு மல்லாமல், புத்தாக்கம் மற்றும் வர்த்தகத்தின் ஒரு உந்துசக்தி யாக முன்னிறுத்துவதே எமது கூட்டு இலக்காகும். அதற்கு இந்தக் கண்காட்சியே சிறந்த சான்றாகும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரி வித்தார்.

வடக்கு மாகாணத்தின் வர்த் தகப் பெருவிழாவான "யாழ்ப் பாண சர்வதேச வர்த்தகக் கண் காட்சி - 2026", 16ஆவது ஆண் டாக இம்முறை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா நிகழ்வு கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் றில்கோ ஹோட்டலில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே ஆளுநர் மேற் கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்று கையில்-

வர்த்தகக் கண்காட்சிகள் என்பவை வெறும் பொருட் காட்சிகள் மட்டுமல்ல. அவை பொருளாதார வளர்ச்சியின் இயந்திரங்களாகும். புதிய கூட்டுப் பங்காண்மைகளுக் கான கதவுகளைத் திறப்பதன் மூலம் இவை முதலீடுகளைத் தூண்டுகின்றன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக ளுக்கு அங்கீகாரத்தையும், தன்னம்பிக்கையையும் வழங்கி வலுவூட்டுகின்றன.

விவசாயம், கடற்றொழில், கைவினைப்பொருட்கள் அல் லது தொழில்நுட்பம் என யாழ் ப்பாணத்தின் தனித்துவமான தயாரிப்புகள் உலகளாவிய பார்வையாளர்களைச் சென்ற டைவதை உறுதி செய்து, பிராந் திய அபிவிருத்தியை இக்கண் காட்சி பலப்படுத்துகின்றது.

எதிர்காலத்தை நோக்கிய எமது பயணத்தில், எமது கைத் தொழில்கள் உலக சந்தையில் போட்டியிடக்கூடிய வகையில் அமைவதற்கு, "டிஜிற்றல் மாற்ற த்தை" நாம் அரவணைத்துக் கொள்ள வேண்டும். அதே வேளை, சுற்றுச்சூழலைப் பாது காக்கும் நிலையான நடைமுறை களில் முதலீடு செய்ய வேண் டும்.

யாழ்ப்பாணத்தின் அடுத்த கட்ட சுபீட்சத்தை வடிவமைக் கவுள்ள எமது இளைஞர்கள் மற்றும் பெண் தொழில்முனை வோரை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். முன்மொழியப்பட் டுள்ள "வடக்கு வணிக சம்மேள னங்களின் இணையம்" எதிர் காலத்தில் எமது பொருளாதார அபிவிருத்தியில் மிக முக்கிய பங்காற்றும் என நான் நம்புகின் றேன்-என்றார்.

இக்கண்காட்சியின் தொட க்க விழாவைத் தொடர்ந்து, விருந்தினர்கள் மங்கல வாத்தி யங்களுடன் யாழ். முற்றவெளி மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு நாடா வெட்டி கண்காட்சிக் கூடங்கள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணத்துக்கான இந்தி யத் துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அர்ஜுன் தர்ம தாச மற்றும் பணிப்பாளர் ஏ. எப்.எம். பாருக், யாழ்ப்பாண வணிகர் மற்றும் கைத்தொழில் மன்றத்தின் தலைவர் குலசிங்கம் வசீகரன், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கே. விக்னேஷ், லங்கா கண்காட்சி மற்றும் மாநாட்டுச் சேவைகள் நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட முகாமையாளர் இமால்கா முல் லேகம, வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அனுசரணை நிறுவ னங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## வரணியில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 24
தென்மராட்சி, வரணி - நாவற்காடு கிராம மக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தைப் பொங்கல் விழா நேற்று முன் தினம் இடம்பெற்றது.

நாவற்காடு கிராம அபிவிரு த்தி சங்கத் தலைவரும், பிரஜா சக்தி தலைவருமான எஸ்.நகு லேஸ்வரன் தலைமையில் பொங் கல் விழா இடம்பெற்றது.

நிகழ்வில், தென்மராட்சி பிரதேச செயலர் பிரான்சிஸ் சந்திரா சத்தியசோதி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய மக்கள் சக்தியின் தென் மராட்சி அமைப்பாளர், வரணி சமுர்த்தி வங்கி முகாமையாளர், சாவகச்சேரி பிரதேச சபை உறு ப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

## முரசுமோட்டை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்பு

கிளிநொச்சி, ஜன. 24
கிளிநொச்சி - கரைச்சி பிர தேசபை முரசுமோட்டை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நேற்று முன் தினம் பிற்பகல் கிளி நொச்சி முருகானந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழ மாலிகிதன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தி னராக கண்டாளை பிரதேச செயலக கணக்காளர் க.கார்த் திகா கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மாகாணசபை முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுல ராசாவும், கிளிநொச்சி - முரசு மோட்டை முருகானந்தா கல்லூரி அதிபர் அரசரத் தினம் பங்கையற்செல்வனும், கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபை முன் னாள் உறுப்பினர் சிறிகாந்தன் கலைவாணியும், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் பொன்னுத் துரை சுந்தரலிங்கம் ஆகியோ ரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் முரசுமோட்டை வட்டார பிரதேச சபை உறுப் பினர் ப.பாஸ்கரன், பரந்தன் வட்டார பிரதேச சபை உறுப்பி னர்களான விக்டர் சாந்தி, க.செந் தூரன் உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## கண்ணம்மா திரைப்பட சிறப்பு திரையிடல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 24
முற்று முழுதாக இலங்கை கலைஞர்களின் பங்கேற்பில் தயாரிக்கப்பட்ட "கண்ணம்மா" திரைப்படத்தின் சிறப்புத் திரை யிடல் யாழ். ராஜா திரையரங் கில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட படக்குழு இதனை தெரிவித்துள்ளது.

ஈழப்போராட்டத்தின் பாதி ப்பையும் வலிகளையும் வெளிப் படுத்தும் விதமாக உருவாகியு ள்ள கண்ணம்மா திரைப்படத் துக்கு பொதுமக்கள் ஆதரவளி க்க வேண்டும் என படக்குழுவி னர் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

2 ஜே மூவீஸ் தயாரிப்பில் யூட் சுகியின் இயக்கத்தில் உரு வாகியுள்ள கண்ணம்மா திரைப் படத்துக்கு பிரசாந் கிருஷ்ண பிள்ளை இசையமைத்துள்ளார். படத்தொகுப்பை சிவநேசன் மேற்கொண்டுள்ளார்.

மூத்த கலைஞர்களான ராஜா மகேந்திரசிங்கம், ஜூலி கொலி ன்ஸ், சபேசன் சண்முகநாதன், கப்டன் பாஸ்கரன், சுவிஸ் ரகு, ஜாஸ்மின், ஜீவேஸ்வரன் உள்ளி ட்டவர்களுடன் பல இளம் கலைஞர்களும் இதில் நடித்துள் ளனர். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.01.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், தை 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஜே.வி.பியும் பயங்கரவாத தடைச்சட்டமும்

வலிதென்மேற்கு பிரதேச சபையில் புதிய பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. தற்போது நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதச் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்னும் கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் பெரும்பான்மை பலமுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது புதிய பயங்கரவாதச் தடைச் சட்டம் ஒன்றை சட்டமாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிலையில்தான் சிவில் சமூகக் குழுக்கள் என்போரும் அரசுசாரா நிறுவன புத்திஜீவிகளும் குறித்த பயங்கரவாதச் தடைச் சட்டத்தை கைவிட வேண்டும் என்று வாதிட்டு வருகின்றனர். அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ்ச் சூழலிலும் இந்த விடயம் விவாதிக்கப்படுகின்றது. முதல் பார்வையில் இது ஒரு சட்ட விவகாரமாக இருந்தாலும்கூட மறுபுறம் இது ஒரு அரசியல் பிரச்சனையாகவும் இருக்கின்றது.

இலங்கை பயங்கரவாதிகளின் பிடிக்குள் சிக்கியிருக்கின்றது - எனவே அவர்களை ஒடுக்குவதற்கு பலமானதொரு சட்டம் தேவை என்னுமடிப் படையில்தான் அப்போதைய ஆட்சியாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பயங்கரவாதச் தடைச் சட்டத்தை கொண்டுவந்தார். இதற்காக தன்னிடமிருந்த பாராளுமன்ற பலத்தை அவர் பயன்படுத்தினார். ஆறு மாதங்களுக்கு மட்டுமே இதனைக் கொண்டுவருகின்றேன் என்னும் ஒரு கதையை கூறியபோது. அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாது விலகிக் கொண்டது.

ஆனால் பின்னர் குறித்த பயங்கரவாதச் தடைச் சட்டம் நிரந்தர சட்ட மானது. பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் ஆனால் தமிழர்கள் மட்டுமல்ல சிங்கவர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஜே.வி.பியும் இதனால் மோசமாக பாதிக்கப் பட்டது. இந்த நிலையில். அவர்கள் ஆட்சியிலிருக்கின்றபோது அந்தப் பாதிப்புக்களை மறந்திருப்பார்களா அல்லது ஆட்சியாளர்களுக்கு முன்னால் அவ்வாறான சென்ரிமென்டுகள் இருக்க வாய்ப்பில்லையா என்னும் கேள்வியும் குறுக்கிடுகின்றது.

இலங்கை அனுபவத்தில் பயங்கரவாதம் பற்றிய பழைய உரையாடல்கள் காலாவதியாகிவிட்டது. ஆனால் ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான சூழல் புதிய உரையாடல்களை ஏற்படுத்தியிருக்கின்றது. புதிய பயங்கரவாதச் தடைச் சட்டம் தொடர்பில் முஸ்லிம் அரசியல்வாதிகளோ அல்லது முஸ்லிம் சிவில் சமூகமோ அதிகம் பேசுவதாகத் தெரியவில்லை. நல்லாட்சி என்று சொல்லப்பட்ட காலத்திலும் புதிய பயங்கரவாத ஏற்பாடுகள் பற்றி விவாதிக் கப்பட்டது - பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ காலத்திலும் சில திருத்தங்கள் பற்றி பேசப்பட்டது - அதன் பின்னர் தற்செயலாக கதிரை கண்ட ரணில் விக்கிரமசிங்க காலத்திலும் பேசப்பட்டது. ஆனால் ஆக்கபூர்வமாக எதுவும் நிகழவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், பயங்கரவாதச் தடைச் சட்டமே இல்லாமல் போகப் போவதில்லை -அவ்வாறு எதிர்பார்த்தால் அது தவறு. ஆனால் ஒரு இனத்தை பாதிக்காத வகையில், கடந்த கால அனுபவங் களை கருத்தில் கொண்டு விடயங்கள் கையாளப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை ஜே.வி.பியின் இன்றைய தலைவர்களால் புறக்கணிக்க முடியாது.

# காணாமல் போன ஆட்களின் முறைப்பாடுகள் விசாரணை!

கிளிநொச்சி, ஜன. 24

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்யும் இந்த ஆண்டுக்கான விசாரணை மேற்கொள்ளும் பணி கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமானது.

நேற்று முன் தினம் வவுனியாவில் விசாரணைகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கான செயலமர்வு நீதியமைச்சர் தலைமையில் நடைபெற்ற நிலையில் நேற்று விசாரணைகளை மேற்கொள்ளும் பணி கிளிநொச்சியில் ஆரம்பமாகியது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய கிளிநொச்சி பிராந்திய அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற 112முறைப்பாடுகள் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஸ் கட்டுலந்த தலைமையில் மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ)

## பாதுகாக்கப்பட்ட வனமாக "நீல்கல" காடு பிரகடனம்!

கொழும்பு, ஜன. 24

நாட்டின் இரண்டாவது பெரிய வனமான "நீல்கல" பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டதாக சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் 40 ஆயிரத்து 684.99 ஹெக்ரெயர் பரப்புள்ள இந்த வனப்பகுதியை பாதுகாக்கப்பட்ட வனமாக்கும் நடவடிக்கை கடந்த ஆண்டு உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தேசிய வனப்பரிபாலன திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார். (ஐ)

## வயோதிபரின் சடலம் மீட்பு

வடமராட்சி, ஜன. 24

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சுற்றாடலில் உள்ள மடத்தில் தங்கியிருந்து யாசகம் செய்து வந்த வயோதிபர் ஒருவர் நேற்று வெள்ளிக் கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இவர் மட்டக்களப்பு பெரியபோரதீவைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மீட்கப்பட்ட சடலம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரின் அனுசரணையுடன் மரண விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான், சடலத்தை பிரேத பரிசோதனை தொடர் மரண விசாரணைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு உறவினரின் வருகைக்காக மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

(அ-02)

## விபத்தில் முதியவர் பலி

கொழும்பு, ஜன. 24

வீதியை கடந்த பாதசாரியை மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 71 வயது முதியவரே உயிரிழந்தார். அநுராதபுரம் - ஹபரணையில் பொலநறுவை வீதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரை ஹபரணை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## பொலிஸாருக்கு கையூட்டு வழங்க முயன்றவருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜன. 24


பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதானவரை எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் கடந்த புதன் கிழமை கம்பஹா - கலகெடிஹேன பகுதியில் போக்குவரத்து பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது அவரிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை.

இதையடுத்து, போக்குவரத்து விதிமீறல் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் முயன்றபோது சந்தேக நபர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாயை கையூட்டாக வழங்க முயன்றார்.

இது தொடர்பில் பொலிஸ் அதிகாரி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நேற்று முன் தினம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன் போதே அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்த ரவிட்டார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**கன்னி**
கடினமான காரியம் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும்.

**மகரம்**
குடும்பத்திலும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

**கும்பம்**
இதுவரை இருந்த சோர்வு, களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் விமர்சித்தாலும் கலங்கி கொண்டே இருக்காதீர்கள்.

# சமூக நல்லிணக்கச் செயல்பாடுகளில் உயர்ந்தளவு மத விழுமியங்கள் தேவை

## யாழ். மாவட்ட அரசாங்க பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

சமூக நல்லிணக்கம், சமூக விழிப்புணர்வு மற்றும் சமூக செயல்பாடுகளில் உயர்ந்தளவு மத விழுமியங்கள் தேவைப்படுகிறது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில், "மதங்களுக்கு இடையிலான நல்லுறவை பேணுகின்ற ஒரு விடயமாக இந்தக் கலந்துரையாடல் காணப்படுகிறது. ஒவ்வொருவரினதும் வாழ்க்கையிலும் மதம் அடிப்படையாகவுள்ளது. பிறப்பிலிருந்து மதத்தை கடைப்பிடித்து ஒழுகி வருகின்றனர். நல்லிணக்க செயல்பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்ல மதம் ஒரு ஊடகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமூகத்தை ஒன்றிணைக்கின்ற செயல்பாட்டை மதங்கள் மேற்கொண்டு வருகின்றன.

மேலும், ஒரு பிள்ளையினுடைய சமூகமயமாக்கல் செயல்பாட்டில் மதங்கள் பாரிய செல்வாக்கு செலுத்தி வருகின்றன. ஒரு குழந்தை ஆரம்ப கல்வி, பாடசாலை கல்வி கற்பதன் ஊடாக மதம் சார்ந்ததாக மாற்றப்படுவதாகவும் மத நம்பிக்கை மற்றும் பின்பற்றப்படும் அனுஷ்டானங்கள், முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட மரபுகளை பழகுகின்ற போது பிள்ளைகள் இயல்பாகவே மதங்களின் வளர்ச்சியுடன் இணைந்து கொள்கின்றனர்.

மதங்கள் இரண்டு விதமான விடயங்களை கூறுகின்றன. ஒன்று மதங்கள் நல்லிணக்கத்தையும் நல்ல செயல்பாடுகளையும் சமூகத்துக்கு மேற்கொள்கின்றன. மற்றையது மதங்களுக்கு இடையே நல்லிணக்க செயல்பாட்டை வலுப்பெற செய்கின்றன.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை நல்லிணக்கச் செயல்பாடுகள் வலுப்பெற்று வருகின்றன. முன்னைய காலத்தில் முரண்பாட்டு நிலைமை காணப்பட்டது. அவை தற்போது மாறி வலுப்பெற்று வருகிறது. முரண்பாடுகள் ஏற்பட்டாலும் அதனை தவிர்ப்பதற்கான இயலுமை மதத் தலைவர்களிடம் காணப்படுகிறது. பொது நிகழ்வுகளில் மதத் தலைவர்கள் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கி வருகின்றனர். இது, சமூக நல்லிணக்கத்துக்கான தொடக்க செயல்பாடாக அமைந்துள்ளது."- என்றார். (எ)

# "வேலணை பிரதேச சபை காணியை கையகப்படுத்த இடமளிக்க முடியாது"

யாழ்ப்பாணம், ஜன. 24

வேலணை பிரதேச சபைக்கு உரித்தான மண்டைதீவு சுற்றுச் சூழல் பூங்காவுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 2. 5 ஏக்கர் காணியை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் தேவைக்கு கையகப்படுத்த யாழ். மாவட்ட செயலகத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்க முடியாது என்று வேலணை பிரதேச சபை தெரிவித்துள்ளது. அத்தோடு, மத்திய அரசின் தூதுவராக செயல்படும் மாவட்ட செயலகத்தின் இந்தச் செயல்பாடு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கியி ருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வேலணை பிரதேச சபைக்கு 15. 01. 2026 ஆம் திகதி அன்று தீர்மானம் எடுக்கப்பட்டதாக கூறி யாழ். மாவட்ட செயலகத்தால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், 15.01.2026 ஆம் திகதியன்று மாவட்ட செயலகத்தில் நடந்த கலந்துரையாடலின் பிரகாரம் தங்களுக்கு வழங்கப்பட்ட வேலணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மண்டைதீவு சுற்றுச்சூழல் பூங்காவுக்கென ஒதுக்கப்பட்டிருந்த சுமார் 2. 5 ஏக்கர் அரச காணியை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கோரி வருவதால் குறித்த காணியில் எதிர்வரும் காலங்களில் எந்தவித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து சபைக்கு தவிசாளர் தெரியப்படுத்தி கருத்து கூறுகையில்,

வேலணை பிரதேச சபையானது ஒரு வருமானம் குறைந்த சபையாக உள்ளது.

நாம் சர்வதேச மைதானத்தை வரவேற்கின்றோம். அதே நேரம் எம்மிடம் இருக்கும் வளங்கள் முழுவதையும் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் கொடுக்க முடியாது.

குறித்த காணி, மைதானம் அமையும் சூழலில் இருப்பதால் அந்தக் காணியை பிரதேச சபை எதிர்காலத்தில் தனக்கான பெரும் வருமானம் ஈட்டும் வளமாக பயன்படுத்த முடியும்.

இதேநேரம் மைதானத்துக்கு தேவையானளவு காணி ஏற்கனவே ஒதுக்கப்பட்டு வேலைத் திட்டமும் நடைபெறுகின்றது.

இந்த நிலையில், ஆடம்பர விடுதிகள் மற்றும் பராமரிப்பு குடியிருப்புக்கள் உள்ளிட்ட இதர நோக்கங்களுக்காகவே காணி கோரப்படுகின்றது.

ஒரு வருமானம் குறைந்த பிரதேச சபையாக இருக்கும் எமது சபை எதிர்காலத்தில் அந்த நிலப்பரப்பை மையமாக வைத்தே பாரியளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும். எனவே, காணியை கையகப்படுத்தும் திட்டத்தை ஏற்க முடியாது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான காணியை சபையின் எதிர்கால நலன்கருதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேறு ஒருவருக்கு வழங்கும் திட்டம் இல்லை என்றும் அதை தீர்மானமாக முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டது. (எ-03)

# மத வழிபாட்டு தலங்களுக்கு காசோலை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 24

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் "டித்வா" புயலால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டு தலங்களுக்கான காசோலை வழங்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மாதகல் பாணாகவெட்டி சிறீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் மற்றும் மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயம் ஆகியவற்றுக்கு இவ்வாறு காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆலயங்களை மீளமைக்கும் பொருட்டு திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட



25, 000 ரூபாய்க்கான காசோலைகளை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி ஆலய நிர்வாக சபையினரிடம் நேற்று முன்தினம் கையளித்தார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சீர்திருத்தத்தை எதிர்ப்பவர்கள் இன, மத முரண்பாட்டை ஏற்படுத்த சதி

## ஆளும் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 24

புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக செயல்படும் தரப்பினர் நாட்டின் மீண்டும் இனவாத - மதவாத முரண்பாடுகளை தோற்றுவிக்கவே முயற்சிக்கிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், "நவீன உலகுக்கும் மனித அபிவிருத்திக்கும் பொருத்தமான வகையில் தான் புதிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டது. கடந்த காலங்களில் கல்வி கொள்கையை மறுசீரமைப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதனை செய்யவில்லை. நாட்டு மக்கள் புதிய கல்விக் கொள்கையை கோருகிறார்கள்.

பாரம்பரியமான கல்வி கொள்கை நடைமுறையில் எந்தளவுக்கு பொருத்தமானது என்பதை ஆராய வேண்டும். மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் திட்டமும் மறுசீரமைக்கப்படவில்லை. ஆசிரிய கலாசாலையின் பாடத்திட்டம் கடந்த 16 ஆண்டுகாலமாக திருத்தியமைக்கப்படவில்லை.

புதிய கல்விக் கொள்கைக்கான உட்கட்டமைப்பு திட்டங்கள் 2025 ஆம் முதல் செயல்படுத்தப்பட்டு பாடத்திட்டங்கள் இந்த ஆண்டு முதல் மறுசீரமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சியினர் புதிய கல்வித் திட்டத்துக்கு அடிப்படை காரணிகள் ஏதும் இல்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

புதிய மாற்றத்தை நோக்கிச் செல்லும் போது குறைகள் மற்றும் தவறுகள் இடம்பெறுவது இயல்பானதே, தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு பேச்சு மூலமாகவே தீர்வு காண வேண்டும். அதற்கு பாராளுமன்றத்தை சிறந்த களமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்", என்று கூறினார். (ஐ)

# சிறந்த கல்வி திட்டத்தை ஆதரிக்க நாங்கள் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, ஜன. 24

சிறந்த முறையில் கல்வித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றனர். அவ்வாறாயின், ஜனாதிபதி ஏன் திட்ட அமுலாக்கத்தை 2027ஆம் ஆண்டு வரை பிற்போட வேண்டும். புதிய திட்டத்தை சிறந்த முறையில் கொண்டு வாருங்கள் நாங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், புதிய கல்வித் திட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கு எவ்வகையான கல்வி வழங்கப்படும் என்று ஒட்டுமொத்த மக்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கல்வி கொள்கை தொடர்பில் நாட்டு மக்கள் எந்தளவுக்கு அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

கல்வி தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நான். ஆனால், இந்த குழுவுக்குக்கூட கல்வி மறுசீரமைப்பு தொடர்பான திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. புதிய கல்வி மறுசீரமைப்பில் ஐந்து தூண்கள் பற்றி குறிப்பிடப்படுகிறது. இதில் ஐந்தாவது தூணாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் முன்னெடுத்தல் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஆனால், பாராளுமன்றத்துக்குக்கூட விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களில் எவரும் புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக செயல்படவில்லை. கல்விக் கொள்கை தயாரிப்பு வெளிப்படைத்தன்மையானதாக காணப்பட வேண்டும். துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் கைதானவருக்கு துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்பு

கொழும்பு, ஜன. 24

ஐஸ் போதைப்பொருளுடன் கைதான சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவருக்கு துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்துடன் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் கடந்த 19ஆம் திகதி ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின்படி அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரிடம், கொழும்பு மத்திய பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

விசாரணைகளில், சந்தேகநபர் 2024 நவம்பர் 8ஆம் திகதி கொழும்பு - மருதானை - நெலும் குளுன் பகுதியில் ஒருவரை துப்பாக்கிச்சூடு நடத்தி படுகாயப்படுத்தியமை தெரிய வந்தது. சந்தேகநபர் உஸ்வெட்டகெய்யாவ பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும் தெரிய வந்தது. (ஐ)

# 100 சொகுசு மின்சார பேருந்துகளை இலங்கைக்கு வழங்குகிறது சீனா!

கொழும்பு, ஜன. 24

இலங்கைக்கு 100 நவீன சொகுசு மின்சார பேருந்துகளை விரைவாக வழங்குவதற்கு சீனா நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பயன்பாட்டால் ஏற்படும் பெரும் சுற்றுச்சூழல் மாசடைவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு பேருந்தின் பெறுமதி சுமார் 2 இலட்சத்து 25 ஆயிரம் டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 6. 9 கோடி ரூபாய் என்றும் சீனத் தூதுவர் மேலும் கூறியுள்ளார்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரத்ன தேரர் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசி பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# சீனா - இலங்கை விவசாய திறனை மேம்படுத்துவது குறித்து உரையாடல்

கொழும்பு, ஜன. 24

சீனா - இலங்கை விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நாட்டின் விவசாய துறையிலும் அது சார்ந்த சுற்றுச்சூழல் ரீதியாகவும் நிலவும் பிரச்னைகளைத் தீர்ப்பது குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில், சீனாவும் இலங்கையும் இணைந்து முன்னெடுக்கும் வேலைத்திட்டமாக நாட்டின் விவசாயத் துறையிலுள்ள பிரச்னைகளைத் தீர்த்து உற்பத்தித் திறனை அதிகரிப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், நாட்டின் விவசாயத் துறை மற்றும் அது சார்ந்த சுற்றுச்சூழல் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சீனாவின் தொழில்நுட்பம், உபகரணங்களை பயன்படுத்தக்கூடிய விதம் குறித்தும், வனவிலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல் மற்றும் பேர வாவியைச் சுத்தப்படுத்தும் பணிகளுக்காகச் சீனாவிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஒத்துழைப்புகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் இரு நாடுகளையும் சேர்ந்த நிபுணத்துவ குழுவினர் பங்கேற்றனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. செங்கலடியில் அனுமதியின்றி தொல்பொருள் அடையாள பலகைகள்

## உடன் அகற்ற பிரதேச சபை தீர்மானம்

மட்டக்களப்பு, ஜன. 24

மட்டக்களப்பு- ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், பிரதேச சபையின் எந்தவித அனுமதியுமின்றி தொல்பொருள் திணைக்களம் தன்னிச்சையாக அடையாளப் பலகைகளை நாட்டி வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளதுடன் அனுமதி பெறப்படாமல் நடப்பட்ட பதாகைகளை சட்டத்தின் கீழ் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் மு. முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, வீதிப்பிரச்னை, வடிகான் பிரச்னை, தொல்பொருள் பெயர்ப்பலகை விவகாரம் மற்றும் பன்குடாவெளி வட்டாரப்பகுதியில் சூரிய மின்சக்தி திட்டம் அமைத்தலுக்கான அனுமதியை மீள் பரிசீலனை செய்தல் உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதன்போது முக்கிய பிரச்னைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் சபை அமர்வின் போது உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின்படி, உள்ளூர் அதிகார சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதேச சபையின் அனுமதி அவசியம். ஆனால், தொல்பொருள் திணைக்களம் எந்தவித ஆலோசனையுமின்றி இப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

தொல்பொருள் இடங்கள் என்று கூறி மக்களின் விவசாய நிலங்களின் மற்றும் பொதுச் சந்திகளிலும் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. இதனால், 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

தொல்பொருள் திணைக்களத்தால் நாட்டப்பட்டுள்ள அடையாளப் பலகைகளில் தமிழ் மொழி மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழியாக தமிழ் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற விதியை மீறி, மொழி உரிமை மீறப்பட்டுள்ளதாக பிரதேச சபை உறுப்பினர் செ. நிலாந்தன் கடும் கண்டனம் தெரிவித்தார். (எ)

# திருமலை- கிண்ணியாவிலும் இஸ்ரேலியர்களின் ஆதிக்கம்?

கொழும்பு, ஜன. 24

அம்பாறை- அறுகம்குடாவில் எவ்வாறு இஸ்ரேலியர்களின் தாக்கம் இருக்கின்றதோ, அதேபோன்று திருகோணமலை சுற்றுலா பிரதேசத்தை அபிவிருத்தி செய்து, இஸ்ரேலியர்களை அங்கு கொண்டுவருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எழுகிறது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"திருகோணமலை- கிண்ணியா பிரதேச செயலகப்பிரிவில் உயர் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்காக காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் 13 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டின் வரவு- செலவுத் திட்டத்தில் 50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் தற்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

தற்போது திடீரென இந்தக் காணியை சுற்றுலா துறைக்கு எடுத்துக்கொண்டுள்ள காரணத்தால், மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் கடந்த டிசெம்பர் மாதம் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவர் இஸ்ரேலுக்கு சென்றிருந்தார்.

அறுகம்குடாவில் எவ்வாறு இஸ்ரேலியர்களின் தாக்கம் இருக்கின்றதோ, அதேபோன்று ஒரு தாக்கத்தை திருகோணமலை சுற்றுலா பிரதேசத்தை அபிவிருத்தி செய்து, இஸ்ரேலியர்களின் வருகையை திருகோணமலையில் பதிக்க வேண்டும் என்பதற்காக செய்கின்ற ஒரு நடவடிக்கையா என்ற சந்தேகம் எமது மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

நாங்கள் அரசியல் செய்வதாக இருந்தால், இதனை வைத்துக்கொண்டு அரசியல் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் மாணவர்கள் மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். அதனால் உயர் கல்லூரி கட்டடத்தில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பயிற்சிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு, இந்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்து இருப்பதால் தொழில் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்று கூறுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை 80 வீதமான பிரதேசங்கள் யானை அச்சுறுத்தல் இருக்கும் இடங்களாகும். அதற்கான ஒரு தீர்வை வழங்க வேண்டும். அதேபோன்று கடந்த அரசாங்க காலத்தில் ஏதாவது தவறு இடம்பெற்றிருந்தால், அதனை சரி செய்து அங்கு கல்வி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்."- என்றார். (எ)

# சமனல இயற்கை சரணாலயத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பு

## சந்தேக நபர் ஒருவர் கைது



நுவரெலியா, ஜன. 24

மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட ஸ்டர்ஸ்பி தோட்டத்துக்கு மேல்பகுதியில் அமைந்துள்ள சமனல இயற்கை சரணாலயத்தில் கால்வாய் அருகே சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்துக் கொண்டிருந்த சந்தேக நபர் ஒருவர் மஸ்கெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் அடங்கிய குழு, குறித்த வனப்பகுதிக்குள் நுழைந்து, இரண்டு நாட்கள் அங்கேயே தங்கி கண்காணிப்பில் ஈடுபட்டு, சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுபான தயாரிப்பு இடத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது, 210 லீற்றர் கசிப்பு அழிக்கப்பட்டதுடன், சந்தேக நபரால் தயாரிக்கப்பட்ட 150 லீற்றர் ஸ்பிரிட் மற்றும் சட்டவிரோத மதுபானம் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், குறித்த தோட்டத்திலேயே வசிக்கும் 69 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரை பொலிஸ் பிணையில் விடுவித்து, அவருக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய 7 பேர் கைது

பதுளை, ஜன. 24

பதுளை மாவட்டத்தில் ரிதிமாலியத்த - பெத்தங்கஹாராவ பகுதியில் சட்டவிரோதமாக புதையல் தோண்டிய 07 சந்தேக நபர்கள் ரிதிமாலியத்த பொலிஸாரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போதே, இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹங்குரான்கெத்த, ரிதிமாலியத்த, கந்தளாய் மற்றும் இறக்குவானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் 41 முதல் 66 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரிதிமாலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மாணிக்கக்கல் அகழ்வு: 2 சந்தேகநபர்கள் கைது

நுவரெலியா, ஜன. 24

நுவரெலியா- பொகவந்தலாவை - கொட்டியாகலவத்த பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே, குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்த 40 மற்றும் 64 வயதுடையவர்கள் என தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நுவரெலியாவில் நேற்றும் கடும் குளிர்

நுவரெலியா, ஜன. 24

நேற்று அதிகாலை வேளையில் நாட்டின் குறைந்தபட்ச வெப்பநிலையாக 5 பாகை செல்சியஸ் நுவரெலியா வானிலை அவதானிப்பு நிலையத்தில் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று நேற்று அதிகாலை பண்டாரவளை பகுதியில் குறைந்தபட்ச வெப்பநிலையாக 12.5 பாகை செல்சியஸும் பதுளை பகுதியில் குறைந்தபட்ச வெப்பநிலையாக 14. 8 பாகை செல்சியஸும் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மஹாஇலுப்பள்ளம பகுதியில் நேற்று அதிகாலை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை 19.3 பாகை செல்சியஸாகும். நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கலஹா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கற்பாறைக்கு சந்தை பெறுமதி இல்லை

கண்டி, ஜன. 24

கண்டி, கலஹா பகுதியில் உள்ள கோவில் நிலத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட விசித்திரமான பாறை குறித்த மர்மம் தற்போது விலகியுள்ளது.

இது 'லெப்ரடோரைட்' வகையைச் சேர்ந்த ஒரு சாதாரணப் பாறை என்றும் இதற்குப் பெரிய அளவில் வணிக ரீதியான அல்லது சந்தை மதிப்பு இல்லை என்றும் தேசிய இரத்தினம் மற்றும் ஆபரண அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை கற்கள் பொதுவாக 'லெப்ரடோரெசென்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன. இது இயற்கையாகவே நீல நிறத்தில் காணப்படக்கூடியது.

இந்தப் பாறையானது மற்றொரு பெரிய பாறைக்குள் பதிந்திருந்த ஒரு சிறிய அளவிலான லெப்ரடோரைட் வகை கல் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இது 'பெல்ட்ஸ்பார்' எனும் கனிம வகையைச் சார்ந்தது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாறையில் காணப்படும் ஒருவித வானவில் போன்ற ஒளிச்சிதறல் மற்றும் தனித்துவமான கனிமப் பண்புகள் காரணமாகவே இது பலருடைய கவனத்தை ஈர்த்தது.

பார்ப்பதற்கு விலையுயர்ந்த இரத்தினம் போலத் தெரிந்தாலும் அறிவியல் ரீதியாக இதற்கு மிக உயர்ந்த மதிப்பு இல்லை என்று அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (எ)

# ஹற்றன் நகைக்கடையில் நூதன முறையில் திருட்டு

ஹற்றன், ஜன. 24

வாடிக்கையாளர் போல் வந்து நூதன முறையில் தங்க நகை திருடிய சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்று ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் நகரின் மத்தியில் அமைந்துள்ள நகைக் கடையில் பிற்பகல் 2. 25 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நகைக் கடைக்கு வருகை தந்த நபர், பல தங்க சங்கிலிகளை பார்வையிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து, இரண்டு இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகை ஒன்றை தெரிவு செய்துள்ளார்.

இதற்கான பற்றுச்சீட்டினை எழுதிக்கொண்டிருந்த வேளையில், அந்த நபர் தங்க நகையை எடுத்துக்கொண்டு ஓடிய காட்சி கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராவில் பதிவாகியுள்ளது. சம்பவத்தின் போது கடை உரிமையாளர் வெளியில் சென்றிருந்ததாகவும் கடையில் பணிபுரியும் இரண்டு பெண்கள் மாத்திரமே இருந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து சி.சி.ரிவி காணொலி உதவியுடன் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளம்...

வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

மாங்குளம் பேருந்து நிலையம் மற்றும் அதனைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்கள் என்பன உரிய வகையில் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனை மாற்றியமைத்து, அப்பகுதியை முழு அளவில் இயக்குவதற்கான திட்ட வரைபு நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்டு, இக்கலந்துரையாடலில் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன:

பேருந்து நிலையத்துக்கான போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான இணைப்பு வீதிகள் அமைத்தல். மாங்குளத்தை மையப்படுத்தி, முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூர் பேருந்து சேவைகளை எதிர்காலத்தில் வினைத்திறனாக ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துதல்.

பேருந்து நிலையத்துக்காகத் திட்டமிடப்படும் வீதி, மாங்குளம் ரயில் நிலையத்திற்குரிய காணி எல்லைக்குள் வருவதால், ரயில்வே திணைக்களத்தின் அனுமதியை விரைவாகப் பெற்றுப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இத்திட்ட முன்மொழிவை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறுமாறும் ஆளுநர் இதன்போது பணிப்புரை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், ரயில்வே திணைக்களப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்டப் பொறியியலாளர், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-05)

## அதிகார...

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க அவரது அரசாங்கத்தில் இருந்தே போராடினேன்.

13 இல் கைவைத்தால் அமைச்சரவையில் இருந்து வெளியேறுவேன் எனவும் அறிவித்திருந்தேன்." எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தச்சட்டம் என்பதைவிட, தமிழ் மக்களுக்கு தமது பகுதிகளை ஆள்வதற்குரிய அதிகாரம் வேண்டும். இந்த நோக்கில்தானே மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. நல்லாட்சியின்போது தீர்வைக் காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டது. எனினும், எமக்கு போதிய பெரும்பான்மை பலம் இருக்கவில்லை. சமஷ்டி ஒரு பக்கம் இருக்கட்டும். 13 ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அதனை ஏன் அமுல்படுத்த முடியாமல் உள்ளது?" - என ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பினார். (அ)

## அரசாங்க...

வைத்தியசாலைகள், மகப்பேற்று வைத்தியசாலைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக சிகிச்சை பிரிவுகள், முப்படை வைத்தியசாலைகள் மற்றும் அங்கொட தேசிய மனநல வைத்தியசாலை என்பவற்றில் வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இந்த வேலை நிறுத்த போராட்டம் நியாயமற்றது என சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

"மருத்துவர்களில் சிறு பிரிவினரே இவ்வாறு வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலான வைத்தியசாலைகளில் விடுதிகளில் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுகின்றன. இது உண்மையில் நியாயமற்றதொரு போராட்டமாகும். சுகாதாரத்துறை சார்ந்த எந்தவொரு வேலை நிறுத்த போராட்டத்தையும் நியாயப்படுத்த முடியாது.

எனவே இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை தடுப்பதற்பு ஆட்சியாளர்கள் என்ற ரீதியில் எமக்கும் பொறுப்பிருக்கிறது. அதேபோன்று தொழிற்சங்கங்களுக்கும் அந்த பொறுப்பிருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் நியாயமற்றவையாகும்.

வரவு - செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் இந்த நாளிலேயே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். எனவே தான் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது நியாயமற்றது எனக் கூறுகின்றோம்.

கொடுப்பனவு மாத்திரமின்றி விசேட வைத்திய நிபுணர்களுக்கான புதிய சேவை யாப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது நீண்டகாலமாக முன்னெடுக்கப்படாமலிருக்கும் ஒரு செயற்பாடாகும். அதனை புதுப்பிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

விசேட வைத்திய நிபுணர்களில் 95 வீதத்துக்கும் அதிகமானோர் கையெழுத்திட்டு அவர்களுக்கென பிரத்தியேக சேவை யாப்பொன்று வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் ஆராய்ந்த குழுவும் அந்த பரிந்துரையை முன்வைத்துள்ளது.

அந்த பரிந்துரைகளிலுள்ள தொழிநுட்ப காரணிகள் குறித்து ஆராய்வதற்காக சகல தொழிற்சங்க உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றும் நியமிக்கப்படும். அந்த குழுவின் தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்க முடியும். எனவே சாதாரண மக்களின் உயிருடன் தொடர்புடைய காரணிகள் குறித்து இதை விட பரந்துபட்டளவில் சிந்தித்து தீர்மானங்களை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்." என்று சுகாதார பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் தமக்கு ஸ்திரமான பதில் வழங்கப்படாவிட்டால் திட்டமிட்ட படி வேலை நிறுத்தத்தை தொடர்வோம் என்றும், இதனால் பொது மக்கள் எதிர்கொண்டுள்ள அசௌகரியங்களுக்கு அரசாங்கமும் சுகாதார அமைச்சரும் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அநுரவை...

வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, இலங்கையின் பொருளாதார மீட்சிக்காகவும், நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கக்கூடிய ஆதரவுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பு குறித்து மகிந்த சிறிவர்தன தனது எக்ஸ் தளத்தில் பொருளாதார சவால்களை எதிர்கொள்வது மற்றும் நெகிழ்ச்சித்திறனை அதிகரிப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். இலங்கையின் நிலையான வளர்ச்சிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த சிறிவர்தன 2025 ஜூன் வரை இலங்கையின் திறைசேரி செயலாளராகப் பணியாற்றியிருந்தார். அவரது ஓய்வுக்கு பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளராக அவர் பதவியேற்றார். (அ)

## தீர்வு...

ரீதியில் 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தது.

இதுபற்றி கருத்து வெளியிடுகையிலேயே மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சமில் விஜேசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அரச வைத்தியசாலைகளில் பாரிய மருந்துப் பற்றாக்குறை மற்றும் தரம் குறைந்த மருந்துகளால் நோயாளிகள் உயிரிழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலைகளில் ஊழியர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லாமை மற்றும் நோயாளிகளுக்கான அடிப்படை வசதிகள் பற்றாக்குறை போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கேட்டுக்கொள்கிறோம். வைத்தியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய டீ.ஏ.டி கொடுப்பனவை முறையாக நடைமுறைப்படுத்தவும். கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் வைத்தியர்களின் வேதனத்தில் மூன்றில் ஒரு பகுதி கழிக்கப்பட்டுள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம். நீண்டகாலமாகத் தாமதிக்கப்படும் இலங்கை சுகாதாரச் சேவை தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி வழங்குங்கள். வைத்தியசாலைகளின் பாதுகாப்பு மற்றும் ஊழியர் வசதிகளை உறுதிப்படுத்துங்கள். அரசாங்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்து, வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மாவட்ட அல்லது மாகாண ரீதியிலான தொடர் போராட்டங்கள் குறித்துத் தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

## அனுஷ...

அனுஷ பெல்பிட்டவை, எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அனுஷ பெல்பிட்ட, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

46 மில்லியன் ரூபாயை எவ்வாறு சம்பாதித்தார், என்பதை வெளியிடத் தவறியதற்காக அனுஷ பெல்பிட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எதிரணியால்...

வருமாறு-

நெருக்கடி நிலையில் இருந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இதற்கிடையில் பேரிடரும் ஏற்பட்டது. எனினும், சவாலை நாம் எதிர்கொண்டோம்.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

நாட்டில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் கொள்ளையடிக்கப்பட்டன. ஆனால் எமது ஆட்சியில் அவ்வாறு நடக்கவில்லை. மக்களுக்குரிய உதவித் திட்டங்கள் வெளிப்படை தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, நாட்டுக்கு தேவையானதொரு எதிர்க்கட்சி எமது நாட்டில் இல்லை என்பதும் பேரிடராகும். நாட்டுக்காக இணைந்து செயல்படவேண்டிய தருணங்களில்கூட பொறுப்பை மறந்து, எதிரணிகள் அரசியல் நடத்தும் நிலை காணப்படுகின்றது.

பாதாள குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது சில எதிரணி அரசியல் பிரமுகர்களுக்கு நடுக்கம் ஏற்படுகின்றது. ஊழல், மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போதும் அவர்களுக்கு ஆட்டம் ஏற்படுகின்றது.

மிகவும் மோசமான முறையிலேயே பிரதான எதிரணி செயல்பட்டுவருகின்றது. இந்த எதிர்க்கட்சியால் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. ஏனெனில் அரசாங்கம் சிறப்பாக செயல்படுகின்றது-என்றார். (அ)

## வலிமேற்கு...

வருகின்றபோதிலும் அரசியல் நோக்கத்திற்காக இந்த குழு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியிலும் சமூக அமைப்புகளின் மத்தியிலும் குழப்பகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைகள் சுயாதீனமாக இயங்குகின்ற கட்டமைப்பை கொண்டுள்ள நிலையில், எச்சந்தர்ப்பத்திலும் இந்த குழு இயங்க முடியாது.

கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வரும் பிரஜாசக்தி என்ற அமைபபானது எமது சபையின் விதி மற்றும் நிர்வாக கட்டமைப்புகளிலும் எந்தவொரு சிபாரிசுகளையும் கோர முடியாது என இந்த சபையில் பிரேரணையை முன்வைக்கின்றேன்-என்றார்.

இதன்போது குறித்த பிரேரணை மீது உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது கடுமையான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதுடன் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது தேசிய மக்கள் சக்தியின் ஐந்து உறுப்பினர்கள் பிரேரணைக்கு எதிராகவும், சபையில் இருந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாகவும் வாக்களித்த நிலையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ-05)

## எம்.பிக்கள்...

வருவதற்கான ஒரு பாதுகாப்பு என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் நிலச்சுவாந்தர்கள் மற்றும் வசதி படைத்தவர்களிடமே அரசியல் அதிகாரம் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள கரு ஜயசூரிய, 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னரே சாதாரண மனிதர்களுக்கும் அரசியலில் இடம் கிடைத்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம் இரத்துச் செய்யப்பட்டால், அது சமூகத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர் தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

அரசியல் என்பது மீண்டும் செல்வந்தர்கள், பெரும் தொழிலதிபர்கள் மற்றும் முறையற்ற வழிகளில் பணம் ஈட்டுபவர்களுக்கு மட்டுமேயான ஒரு களமாக மாறிவிடும்.

தமது சொத்துக்களை விற்று மக்கள் சேவைக்கு வரும் நேர்மையான அரசியல்வாதிகள், தமது முதுமைக் காலத்தில் வாழ்வாதாரம் இன்றித் தவிக்கும் நிலை ஏற்படும்.

இது நேர்மையானவர்கள் அரசியலுக்கு வருவதைத் தடுக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன்னைப் போன்ற ஒரு சிலர் இந்த ஓய்வூதியத்தைப் புண்ணிய காரியங்களுக்குப் பயன்படுத்தினாலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை இந்த ஓய்வூதியத்தைக் கொண்டே கழிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தற்போது புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முதற்கட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

எனவே, இந்த புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் போது, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதிய விவகாரத்தில் அவசரமான முடிவுகளை எடுக்காது, ஜனநாயகத்தையும் சாதாரண மக்களின் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்கக்கூடிய வகையில் ஒரு நடுநிலையான தீர்வை எட்ட வேண்டும் என கரு ஜயசூரிய ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (அ)

## வடமராட்சி...

வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி கரவலை தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த தடை நாடு முழுவதுக்குமானது எனவும் அறிவித்துள்ளது.

இருந்தும் வடமராட்சி கிழக்கின் ஒரு சில பகுதிகளில் தற்போதும் உழவியந்திரத்தை பயன்படுத்தி கரைவலை தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

## வவுனியா...

வைக்கப்பட்டது.

இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் முதன் முதலாக தரச்சான்றிதழ் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் கிரிசாந்த அபெயசேன, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஜெகதீஸ்வரன், எஸ். திலகநாதன், பல்கலைக்கழக வேந்தர், துணைவேந்தர் அ. அற்புதராஜா உட்பட அமைச்சின் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 150 கோடி டொலர் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதே இலக்கு

## இலங்கை முதலீட்டு சபை

கொழும்பு, ஜன. 24

இலங்கை முதலீட்டு சபை இந்த ஆண்டில் 150 கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளதாக அதன் தலைவர் அர்ஜூன ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான முதலீட்டு திட்டங்களில் சினோபெக் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டம், மசாலா மற்றும் வேளாண் உற்பத்தி செயலாக்கம், தரவு மையங்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் அடங்கும் என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு 125.7 கோடி டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடு கிடைத்தது. 186 நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்தன. இவற்றில் 146 முதலீட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தத் திட்டங்களின் மொத்த மதிப்பு 190.6 கோடி அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முதலீட்டு திட்டங்களில் 70 புதிய திட்டங்களும் 76 ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள நிறுவனங்களின் விரிவாக்கத் திட்டங்களும் அடங்குகின்றன.

முதலீட்டு திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், அனுமதி செயல்முறைகளை எளிமைப்படுத்தல், மேலும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்படுதல் போன்ற புதிய நடவடிக்கைகள் மூலம், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி முதலீடுகளுக்கு உகந்த சூழலை முதலீட்டு சபை உருவாக்கி வருவதாகவும் அதன் தலைவர் மேலும் கூறினார். (ஐ)

# 1,282 தொழுநோயாளர் புதிதாக அடையாளம்!

கொழும்பு, ஜன. 24

கடந்த ஆண்டில் ஆயிரத்து 282 தொழு நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டனர் என்று தொழுநோய் ஒழிப்பு பிரச்சார இயக்குநர் மருத்துவர் யசோமா வீரசேகர தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புதியதாக அடையாளம் காணப்பட்டவர்களில் 10 வீதத்தினர் - சுமார் 123 பேர் 15 வயதுக்கு உட்பட்டவர்கள். 8 சதவீதத்தினர் ஏற்கனவே நோயறிதலின்போது குறைபாடுகளை உருவாக்கியிருந்தனர்.

தேவையான அனைத்து சிகிச்சை முறைகளும் அரச மருத்துவமனைகளில்இலவசமாக வழங்கப்படுவதுடன் சிகிச்சை வழங்குவதில் எவ்வித தாமதமும் ஏற்படவில்லை - என்றும் கூறினார். (ஐ)

# ஆயுதம் மூலம் ஆட்சியை பிடிக்கலாம் என்பதே ஜே. வி. பியின் நிலைப்பாடு!

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, ஜன. 24

வன்முறை ஊடாக ஆயுதங்களை ஏந்தி அரச பலத்தைப் பெற முடியும் என்பதே தற்போது மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) நிலைப்பாடாகவுள்ளது - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மகா சங்கத்தினராகவே இருந்தாலும் அவர்கள் தம்மை தாக்கினால் தாமும் பதில் தாக்குதல் நடத்துவோம் என அமைச்சர் லால் காந்த பகிரங்கமாக தெரிவித்துள்ளார். இதுவே ஜே.வி.பி.யின் உண்மையான முகமாகும்.

இது இலங்கை - இந்த நாட்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பிரதாயங்கள் உள்ளன என்பதை இந்த அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றோம். இவ்வாறானவர்களை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருப்பதா அல்லது ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

வன்முறையின் ஊடாக ஆயுதங்களை ஏந்தி அரச பலத்தைப் பெறமுடியும் என்பதே தற்போது ஜே. வி. பியின் நிலைப்பாடாகவுள்ளது. அவ்வாறு இவர்களால் அரச அதிகாரம் கைப்பற்றப்படும்பட்சத்தில் இந்நாட்டில் மீண்டும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் நடத்தப்படமாட்டாது. நாட்டிலுள்ள சகல ஜனநாயக சக்திகளும் இணைந்து இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். அரசியல் பேதங்களை துறந்து ஐக்கியத்துடன் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (ஐ)

# ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச்சூடு மேலும் ஒரு சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜன. 24

கொழும்பு - ஜிந்துபிட்டி பகுதியில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் கடலோர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜிந்துபிட்டி பகுதியில் கடந்த 16ஆம் திகதி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சிறுவர்கள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கடலோர வீதியில் வைத்து மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# மேலதிக நேர கொடுப்பனவை பெற மோசடி செய்த ஆட்பதிவு ஊழியர்கள்

கொழும்பு, ஜன. 24

மேலதிக நேர கொடுப்பனவை பெறுவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தின் சில ஊழியர்கள் திட்டமிட்டு மோசடிகளில் ஈடுபட்டு வந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆட்பதிவு திணைக்களத்தில் அடையாள அட்டைகளை பெறுவதற்காக முதியவர்கள், நோயாளர்களென ஆயிரக்கணக்கானவர்கள் அதிகாலை முதல் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

ஆனால், அவர்களுக்குச் சேவை வழங்க வேண்டிய சில ஊழியர்கள், அதிகாலை 5.30 மணியளவில் வீட்டு உடையிலேயே பணிமனைக்கு வந்து பாதுகாப்பு பிரிவினருக்கான நுழைவாயில் வழியாக சென்று கைரேகை இயந்திரத்தில் தமது வரவை உறுதி செய்துவிட்டு மீண்டும் அதேவழியால் வீடு திரும்புகின்றனர். சில பெண் ஊழியர்கள் தமது கணவர்களுடன் காரில் வந்து கைரேகை இயந்திரத்தில் வரவை உறுதி செய்துவிட்டு செல்வதும் கண்டறியப்பட்டுள்ளது.

பின்னர், அவர்கள் முற்பகல் 10 மணிக்கே அலுவலக உடையுடன் பணிமனைக்கு வந்து பணிகளை தொடர்கின்றனர்.

வேலை செய்யாமலேயே மேலதிக நேரக் கொடுப்பனவை பெறும் நோக்கில் இந்த ஊழியர்கள் முன்னெடுக்கும் இவ்வாறான செயலால், வரிசையில் காத்திருக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சுஹூருபாயவில் பொலிஸ், இராணுவத்தினர் 24 மணிநேர சி. சி. ரீ. வி. கமெரா கண்காணிப்பு இருக்கின்ற நிலையிலும் இந்த முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# சாமர எம். பி.க்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, ஜன. 24

சாமர சம்பத் தசநாயக்க எம். பி.க்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்த விவரங்கள் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டன.

சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் உத்தியோகபூர்வமாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ்.போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு நடவடிக்கைகள் நேற்றுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

மேல் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை விடுக்கப்படும்போது, அங்கு முன்னிலையாகுமாறு சந்தேகநபரான சாமர சம்பத் தசநாயக்கவுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# ராகம நகரம் மாற்றியமைக்கப்படும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24

ராகம நகரத்தை மையமாகக் கொண்டு போக்குவரத்து மத்திய நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த நகரத்தில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்கள் தொடர்பாக நேற்று பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ராகம நகரத்தை ஒரு சுகாதார நகரமாகவும் கல்வி நகரமாகவும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கிறோம். ஜா-எல நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள ராகம சுகாதார நகரத்தின் அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சட்டவிரோத கட்டுமானங்கள் தடையாக உள்ளன. சுமார் ஆறு பேர் வரையில் இதனை ஆக்கிரமித்துள்ளனர்.

அதிகாரிகள் அங்கு சென்றபோதுகூட சோதனையிட அவர்கள் இடமளிக்கவில்லை. பழைய அரசியல் பலத்தைப் பயன்படுத்தி அவர்கள் செயல்படுகின்றமை தெரிகிறது. இது ராகம நகர அபிவிருத்திக்கு தடையாகும். எனவே, இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். கந்தானை பகுதியில் தாதியர் பாடசாலை ஒன்றும் உள்ளது. எனவே, இது ஒரு கல்வி மையமாகவும் மாறும் - என்றார். (ஐ)

# ஜோன்ஸ்டன் உட்பட ஐவருக்கும் மறியல்

கொழும்பு, ஜன. 24

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரின் மகன்கள் இருவர் உட்பட 5 சந்தேகநபர்களையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் வத்தளை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக பதவி வகித்த காலத்தில், சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைக்கேடாக பயன்படுத்தினார் என்று கூறப்படும் சம்பவம் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.